வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—செங்கேணி-பழனி

தேதி 12.11.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இன்று, போட்ஸ்வானா-வில், அந்நாட்டு அதிபர் திரு டூமா போக்கோ-வை சந்தித்து, இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று பூட்டானில் இருந்து திரும்பிய உடன், புதுடெல்லி LNJP மருத்துவமனைக்கு நேரில் சென்று, கார் குண்டு வெடிப்பில் காயமடைந்தவர்களை சந்தித்து ஆறுதல் கூறினார்.

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று புதுடெல்லியில், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் துறையினருடன், பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.

இவ்வாண்டு தமிழகத்தில் இருந்து UPSC முதன்மை தேர்வு எழுதியவர்களில் 155 பேர் வெற்றி பெற்றுள்ளது குறித்து, துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

முர்மு-போட்ஸ்வானா

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இன்று, போட்ஸ்வானா நாட்டின் கேபரோன் நகரில் அந்நாட்டு அதிபர் திரு டூமா போக்கோ-வை சந்தித்து இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினார். குடியரசு தலைவரின் பயணம் குறித்து ஒரு செய்தி தொகுப்பு........

(வாய்ஸ்)

குடியரசு தலைவருக்கும் போட்ஸ்வானா அதிபருக்கும் இடையிலான பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து, சுகாதாரம், மருந்து

உற்பத்தி ஆகிய துறைகளில் ஒத்துழைப்பு குறித்து, இருநாடுகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. பிராஜக்ட் சீட்டா திட்டத்தின் கீழ், இந்தியாவிற்குப் பரிசாக, 8 சிறுத்தைப் புலிகளை, போட்ஸ்வானா வழங்கும் என்றும் அறிவிக்கப்பட்டது. அங்கோலாவில் இருந்து நேற்று மாலை போட்ஸ்வானா சென்று சேர்ந்த, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, போட்ஸ்வானாவில், அந்நாட்டு நாடாளுமன்றத்தில் உரையாற்ற இருக்கிறார். போட்ஸ்வானாவில் உள்ள இந்திய சமூகத்தினரையும் அவர் சந்திக்கிறார். இந்திய குடியரசு தலைவர் ஒருவர், அங்கோலா மற்றும் போட்ஸ்வானா-விற்கு பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறை என்பதும் குறிப்பிடத் தக்கது.

மோடி-பூட்டான்

பிரதமர் திரு நரேந்திர மோடி தமது 2 நாள் பூட்டான் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு, இன்று பிற்பகல் புதுடெல்லி திரும்பினார். இப்பயணத்தின் போது, உலக அமைதிக்கான பிரார்த்தனை விழாவின் ஒரு பகுதியாக நடைபெற்ற, காலச் சக்ரா பௌத்தச் சடங்கை, பூட்டான் மன்னர், மற்றும், பௌத்த மடாலயத்தின் தலைமை குருவுடன் இணைந்து, பிரதமர் தொடக்கி வைத்தார். முன்னதாக பூட்டான் நாட்டின் மின்சார உற்பத்தி திட்டங்களுக்கு, இந்தியாவின் சார்பில், 4 ஆயிரம் கோடி ரூபாய் குறைந்த வட்டிக் கடன் உதவிகளை அவர் அறிவித்தார். இந்தியா- பூட்டான் ஒத்துழைப்பு மூலம் பூட்டானில் நீர் மின்சார திட்டம் அமைக்கும் பணிகளையும், பூட்டான் மன்னருடன் இணைந்து, அவர் தொடக்கி வைத்தார். புதுப்பிக்க வல்ல எரிசக்தி, மனநல சேவைகள் மற்றும் மருத்துவ துறையில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில் 3 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாயின. பிரதமர் திரு நரேந்திர மோடி பூட்டானில், பூட்டான் மன்னர் திரு ஷெரிங் டோப்கே-வை சந்தித்துப் பேசினார். இருநாடுகளுக்கும் இடையே, விண்வெளி, நிதி தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பு வலுவாகி வருவது குறித்து இருதலைவர்களும் திருப்தி வெளியிட்டனர்.

மோடி-மருத்துவமனை

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று பூட்டானில் இருந்து புதுடெல்லி திரும்பிய உடனேயே, LNJP மருத்துவமனைக்கு நேரில் சென்று, டெல்லி கார் குண்டு வெடிப்பில் காயமடைந்து சிகிச்சையில் உள்ளவர்களை சந்தித்து ஆறுதல் கூறினார். இவர்களின் உடல் நிலை குறித்து டாக்டர்கள் பிரதமரிடம் எடுத்துக் கூறினர். குண்டு வெடிப்பின் பின்னணியில் உள்ள சதிகாரர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள் என்று சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறி உள்ளார்.

நிர்மலா

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று புதுடெல்லியில், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் துறை பிரதிநிதிகளுடன் பட்ஜெட்டிற்கு முந்தைய 3-ஆவது ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். வரவிருக்கும் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டில் இடம் பெற வேண்டிய அம்சங்கள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மத்திய நிதி துறை இணை அமைச்சர் திரு பங்கஜ் சவுத்ரி, மற்றும், சிறு-குறு-நடுத்தர தொழில் துறை அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

நட்டா

நிமோனியா நோயிலிருந்து எல்லா குழந்தைகளையும் பாதுகாக்க, அரசு உறுதிப்பாடு கொண்டுள்ளதாக மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் ஜே பி நட்டா கூறி உள்ளார். இன்று உலக நிமோனியா தினத்தை ஒட்டி, சமூக ஊடகத்தில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில், சமூக அளவிலான விழிப்புணர்வு மற்றும் செயல்பாடுகள் மூலம் வெற்றிகரமாக நிமோனியாவை ஒழிப்பது குறித்து, SAANS திட்டத்தை அரசு தொடக்கி இருப்பதாக தெரிவித்துள்ளார். நிமோனியா இல்லை என்றால்- ஆம், அதுவே சரியான குழந்தைப் பருவம் என்ற கருப்பொருள் அடிப்படையில், இந்த விழிப்புணர்வு திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

துவிவேதி

தொழில்நுட்பங்கள், மனிதனுக்கு மாற்றாக அன்றி, துணையாகப் பயன்பட வேண்டும் என தலைமை ராணுவ தளபதி ஜென்ரல் உபேந்திர துவிவேதி கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில், பாதுகாப்பு துறை

பற்றிய, டெல்லி பேச்சு வார்த்தை மாநாட்டில் உரையாற்றிய அவர் இந்திய ராணுவத்தில் மனிதர்களை மையமாக கொண்ட தொழில் நுட்பங்களுக்கே முக்கியத் துவம் அளிக்கப்படுவதாக தெரிவித்தார். நவீன போர் முறைகளில் தொழில் நுட்பங்களின் பயன்பாடு அதிகரித்து வருவதை அவர் சுட்டிக்காட்டி, ராணுவத்தின் செயல்பாடுகளில் செயற்கை நுண்ணறிவு, ரோபோட்டிக்ஸ் மற்றும் சைபர் கருவிகளின் பயன்பாட்டை இன்னும் அதிகரிக்க முடியும் என்றார்.

*கடற்படை*

கடற்படை தலைவர் அட்மிரல் தினேஷ் திரிபாதி, இன்று முதல் அமெரிக்காவிற்கு 6 நாள் பயணம் மேற்கொள்கிறார். இந்திய- அமெரிக்க கடற்படைகளுக்கு இடையிலான கூட்டாண்மை உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கிலான இப்பயணத்தின் போது, அமெரிக்க போர்த் துறை அதிகாரிகள் மற்றும் இதர பிரமுகர்களை அவர் சந்திக்க இருக்கிறார். இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் பொதுவான கடல்சார் முன்னுரிமைகளை பகிர்ந்து கொள்வது குறித்தும், மிலன் உள்ளிட்ட பலதரப்பு கட்டமைப்புகளுக்கு உட்பட்ட அகநிலை ஒத்துழைப்பு குறித்தும் இப்பயணத்தின் போது முக்கியத் துவம் அளிக்கப்படும்.

*உதயநிதி*

இவ்வாண்டு தமிழகத்தில் இருந்து UPSC முதன்மை தேர்வு எழுதியவர்களில் 155 பேர் வெற்றி பெற்று இருப்பது மகிழ்ச்சிக்கு உரியது என்று துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் கூறி உள்ளார். நான் முதல்வன் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு அரசுப் பயிற்சி மையங்களில் பயிற்சி பெற்ற 87 பேர் இத்தேர்வில் வெற்றி பெற்றுள்ளதாக அவர் பெருமிதம் வெளியிட்டுள்ளார். ஆண்டுதோறும் 100 குடிமைப் பணி அதிகாரிகளை உருவாக்குவதே நான் முதல்வன் திட்டத்தின் இலக்கு என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

*விருது*

பிரான்ஸ் நாட்டின் உயரிய செவாலியே விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள, திரைத் துறைக் கலை இயக்குநர் தோட்டா தரணிக்கு, தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்தியாவில் இருந்து இவ்விருது பெற்ற மகத்தான

ஆளுமைகளின் பட்டியலில் தோட்டா தரணி இணைவது, பெருமைக்கு உரியது என்றும் முதலமைச்சர் கூறி உள்ளார்.

*புதுச்சேரி-மழலையர் பள்ளி*

புதுச்சேரியில், நகரப் பகுதியில் இயங்கி வரும் எக்கோலஸ் ஆங்கிலேஸ் அரசுத் தொடக்கப் பள்ளியில் இன்று நடைபெற்ற பள்ளி அளவிலான அறிவியல் கண்காட்சியில், மழலையர் வகுப்பு முதல் 5-ஆம் வகுப்பு வரை பயிலும் சுமார் 210 மாணவர்கள், தங்களின் அறிவியல் படைப்புகளை காட்சி படுத்தி இருந்தனர். சந்திரயான் விண்கலம், மற்றும், குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தின் மாதிரி வடிவங்களும், சோலார் மின்சாரம், மற்றும் பிளாஸ்டிக் தவிர்ப்பு குறித்த விழிப்புணர்வுப் படைப்புகளும் இதில் அடங்கும். குறிப்பாக மனித இயந்திரம் போல் உடை அணிந்த ரோபோ மாணவரின் விண்வெளி நடை மற்றும் இதர செயல்பாடுகள், பார்வையாளர்களின் கவனத்தைக் கவர்ந்தன. வகுப்பறையில் கற்பதற்கு மேல் மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்த இத்தகைய கண்காட்சிகள் மற்றும் அறிவியல் படைப்புகள் உதவிகரமாக இருக்கும் என பள்ளி தலைமை ஆசிரியர் திரு சிவக்குமார் கூறினார்.

*புதுச்சேரி-போக்குவரத்து*

புதுச்சேரி அரசின் போக்குவரத்து துறை, PY-01 DF வரிசையில் உள்ள வாகனப் பதிவு எண்களை, வரும் 19-ஆம் தேதி, இணையதளம் மூலமாக ஏலம் விட இருக்கிறது. இணையதளத்தில் புதிய பயனராகப் பதிவு பெற்று, விருப்பமான எண்ணுக்குரிய அடிப்படைத் தொகையை செலுத்தியவர்கள் மட்டுமே ஏலத்தில் பங்கு பெறலாம் என்றும், போக்குவரத்து துறை அறிவித்துள்ளது.

*ஒலிபரப்பு தினம்*

நாட்டில், பொது சேவை ஒலிபரப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. இதுகுறித்து ஒரு செய்தி தொகுப்பு........

(வாய்ஸ்)

1947-ஆம் ஆண்டு இதே நாளில்தான், தேசத் தந்தை மகாத்மா காந்தி புதுடெல்லி வானொலி நிலையத்திற்கு வந்து, பாகிஸ்தானில் இருந்து புலம் பெயர்ந்த இந்தியர்களுக்கு உரையாற்றினார்.

ஆண்டுதோறும் இந்நாள், பொது சேவை ஒலிபரப்பு தினமாக கடைபிடிக்கப்படும் என, இரண்டாயிரமாவது ஆண்டில், அப்போதைய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் அறிவித்தார். புதுடெல்லி வானாலி நிலையத்தில், மகாத்மா காந்தி உரையாற்றிய ஒலிபரப்பு அறைக்கு, கடந்த 2003-ஆம் ஆண்டு மார்ச் மாதம், பிரதமர் திரு நரேந்திர மோடியின் 100-ஆவது மன் கி பாத் நிகழ்ச்சியை ஒட்டி, பாபு ஸ்டூடியோ எனப் பெயர் சூட்டப்பட்டது. மகாத்மா காந்தியின் வானொலி உரையைத் தொடர்ந்து, டெல்லியில் அவரது பிர்லா ஹவுஸ் பிராத்தனைக் கூட்டங்கள், அன்றாட அடிப்படையில் ஒலிப்பதிவு செய்யப்பட்டதும் இது தொடர்பான ஒலி நாடாக்களை, பிரசார் பாரதி ஆவணக் காப்பகம், இன்று வரை பேணிப் பாதுகாத்து வருவதும் குறிப்பிடத் தக்கது.

*ஷார்ஜா*

ஷார்ஜாவில் நடைபெறும் 44-ஆவது ஷார்ஜா சர்வதேச புத்தக கண்காட்சியில், இந்தியாவின் சார்பில் முதல் முறையாக, தேசிய புத்தக அறக்கட்டளையால் அமைக்கப்பட்டுள்ள அரங்கு, பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்துள்ளது. இந்தியாவில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட பதிப்பகங்கள் இதில் கலந்து கொண்டு, ஆங்கிலம், ஹிந்தி மற்றும் பல்வேறு பிராந்திய மொழிகளில், பெரும் எண்ணிக்கையிலான புத்தகங்களை காட்சிக்கு வைத்துள்ளன. உலக அளவில் இந்திய இலக்கியம் பற்றிய உணர்வு அதிகரித்து வருவதையும், அராபிய உலகுடன் இந்தியாவின் கலாச்சார உறவுகள் வலுப்பட்டு வருவதையும் பிரதிபலிக்கும் வகையில் இந்த அரங்கு அமைந்திருப்பதும் குறிப்பிடத் தக்கது.

*இலக்கிய விருது*

குழந்தை இலக்கியத்திற்கான, சாகித்ய அகாடமியின் பால் புரஸ்கார் விருது, புதுடெல்லியில் வரும் 14-ஆம் தேதி நடைபெறும் விழாவில் வழங்கப்பட உள்ளது. சாகித்ய அகாடமியின் தலைவர் திரு மாதவ் கவுஷிக், இந்த விருதுகளை வழங்கி சிறப்பிக்கிறார். ஆங்கிலத்தில், நிதின் குஷாலப்பா எழுதிய South Indian Fables Retold நூலுக்கும், ஹிந்தியில், சுசில் சுக்லா எழுதிய, ஏக் பட்டே பாரா நூலுக்கும், பால் புரஸ்கார் விருது

வழங்கப்பட உள்ளது. விருதாளர்களுக்கு, தலா 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு மற்றும் வெண்கலப் பட்டயம் வழங்கப்படும்.

*வானிலை*

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, தென் தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், வட தமிழகத்தின் ஓரிரு இடங்கள் மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நெல்லை, குமரி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 18-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, குமரி மாவட்டம் மயிலாடியில், 13 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

*செவிலியர்*

செவிலியர் துறைக்கான முன்னுரிமைக் கொள்கைகள், மற்றும், சீர்திருத்தங்கள் குறித்து மத்திய சுகாதார அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, ஆலோசனை மற்றும் அனுபவ பகிர்வுக்கான 3 நாள் தேசிய பயிலரங்கு, புதுடெல்லியில் இன்று தொடங்கி உள்ளது. மத்திய சுகாதாரத் துறை செயலர் திருமதி புண்யா சலிலா ஸ்ரீவாஸ்தவா இந்நிகழ்ச்சியில் பேசுகையில், செவிலியர்கள் மற்றும் செவிலித் தாய்மார்களுக்கு, தேசிய அளவில் தனி ஆணையம் அமைக்கப்பட்டதும், செவிலியர் படிப்பிற்கான பாடத் திட்டம், தரம் உயர்த்தப்பட்டதும், இத்துறைக்கான அரசின் சீர்திருத்தங்களில் முக்கியமானவை என்று கூறினார். நாட்டின் மருத்துவ துறையில் தூணாகவும், முதுகெலும்பாகவும் திகழ்வது செவிலியர்கள் தான் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இன்று, போட்ஸ்வானா-வில், அந்நாட்டு அதிபர் திரு டூமா போக்கோ-வை சந்தித்து, இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று பூட்டானில் இருந்து திரும்பிய உடன், புதுடெல்லி LNJP மருத்துவமனைக்கு நேரில் சென்று, கார் குண்டு வெடிப்பில் காயமடைந்தவர்களை சந்தித்து ஆறுதல் கூறினார்.

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று புதுடெல்லியில், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் துறையினருடன், பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.

இவ்வாண்டு தமிழகத்தில் இருந்து UPSC முதன்மை தேர்வு எழுதியவர்களில் 155 பேர் வெற்றி பெற்றுள்ளது குறித்து, துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

------------------------------